**நாடு முழுவதும் ரூ.24,470 கோடியில் 508 ரயில் நிலையங்களை புதுப்பிக்க**

# பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்

- **எதிர்க்கட்சியினரில் ஒரு பகுதியினர் அவர்களும் எதுவும் செய்வது இல்லை, யாரையும் எதையும் செய்யவிடுவதும் இல்லை என்று கடுமையாக விமர்சித்தார்.**

**• புதுடெல்லி**

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 18 ரயில் நிலையங்கள் உட்பட நாடு முழுவதும் 508 ரயில் நிலையங்களை ரூ.24,470 கோடி மதிப்பில் அதிநவீன வசதிகளுடன் புதுப்பிக்க பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

நாடு முழுவதும் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் 508 ரயில் நிலையங்கள் ரூ.24,470 கோடியில் புதுப்பிக்கப்படுகின்றன. இதில் தமிழகத்தில் அரக்கோணம், செங்கல்பட்டு, கூடுவாஞ்சேரி, கும்மிடிப்பூண்டி, ஜோலார்பேட்டை, கரூர், மயிலாடுதுறை, நாகர்கோவில், பெரம்பூர், போத்தனூர், சேலம், தென்காசி, தஞ்சாவூர், திருப்பூர், திருத்தணி, திருவள்ளூர், விழுப்புரம், விருதுநகர் ஆகிய 18 ரயில் நிலையங்கள் ரூ.515 கோடியில் புதுப்பிக்கப்படுகின்றன.

இத்திட்டத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி நேற்று அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து, காணொலி மூலம் அவர் பேசியதாவது:

நாடு சுதந்திரம் அடைந்து 75-வது ஆண்டில், 'புதிய இந்தியா, வளர்ந்த இந்தியா' என்ற இலக்கை நோக்கி விரைவாக சென்று கொண்டிருக்கிறது. புதியசக்தி, புதிய உத்வேகம், புதிய இலக்குகளுடன் நாம் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

இந்திய ரயில்வே வரலாற்றில் தற்போது புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது. நாட்டில் உள்ள 1,300 முக்கிய ரயில் நிலையங்கள் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட உள்ளன. முதல் கட்டமாக, அதில் 508 ரயில் நிலையங்களுக்கு தற்போது அடிக்கல் நாட்டப்படுகிறது. நாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் இத்திட்டத்தின் பயன் கிடைக்கும்.

உத்தர பிரதேசம், ராஜஸ்தானில் தலா 55 ரயில் நிலையங்கள் ரூ.4,000 கோடியில் மேம்படுத்தப்படும். மத்திய பிரதேசத்தில் 34 நிலையங்கள் ரூ.1,000 கோடியிலும், மகாராஷ்டிராவில் 44 நிலையங்கள் ரூ.1,500 கோடியிலும், தமிழகத்தில் 18 நிலையங்கள் ரூ.515 கோடியிலும் புதுப்பிக்கப்பட உள்ளன. கேரளா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களிலும் முக்கிய ரயில் நிலையங்கள் புதுப்பிக்கப்பட உள்ளன. இந்த வரலாற்று சிறப்புமிக்க திட்டத்துக்காக ரயில்வே அமைச்சகத்துக்கும், நாட்டு மக்களுக்கும் வாழ்த்துகள்.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. தேர்தல் மூலம் நாட்டில் நிலையான அரசை மக்கள் தேர்ந்தெடுத்ததுதான் இதற்கு முதல் காரணம். அரசு லட்சியமிக்க முடிவுகளை எடுத்து மக்களின் மேம்பாட்டுக்காக அயராது பாடுபட்டது 2-வது காரணம்.

கடந்த 9 ஆண்டுகளில் நாட்டில் அமைக்கப்பட்டுள்ள ரயில் பாதைகளின் நீளம், தென்னாப்பிரிக்கா, உக்ரைன், போலந்து, இங்கிலாந்து, ஸ்வீடன் ஆகிய நாடுகளில் உள்ள மொத்த ரயில்வே நெட்வொர்க்கைவிட அதிகம்.

தற்போது ரயில் பயணத்தை மத்திய அரசு சொகுசாக மாற்றியுள்ளது. ரயில் நிலையங்கள், காத்திருப்பு அறைகளில் பயணிகளுக்கு இலவச வைஃபை உட்பட பல வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. பல ரயில் நிலையங்களை நவீனப்படுத்துவதன் மூலம், வளர்ந்த நாடுகளுக்கு நிகராக இங்கும் புதிய சூழல் ஏற்படும். ரயில் நிலையங்களை மேம்படுத்துவதன் மூலம் சுற்றுலா மட்டுமின்றி, அதன் அருகில் உள்ள பகுதிகளில் பொருளாதார நடவடிக்கைகளும் மேம்படும்.

நம் நாட்டில் துரதிர்ஷ்டவசமாக எதிர்க்கட்சியினரில் ஒரு பகுதியினர் இன்னும் பழைய முறைகளை பின்பற்றுகின்றனர். அவர்களும் எதுவும் செய்வது இல்லை, யாரையும் எதையும் செய்யவிடுவதும் இல்லை. நவீன நாடாளுமன்ற கட்டிடம் கட்டியது, டெல்லி ராஜபாதையை மேம்படுத்தி கடமை ('கர்தவ்ய') பாதையாக மாற்றியது ஆகியவற்றைகூட எதிர்க்கட்சியினர் எதிர்த்தனர். நாட்டுக்காக உயிர்நீத்த வீரர்களுக்கு 70 ஆண்டுகாலமாக அவர்கள் நினைவுச் சின்னம் கட்டவில்லை. நாங்கள் தேசிய போர் நினைவுச் சின்னத்தை கட்டியபோது, வெட்கப்படாமல் அதையும் விமர்சித்தனர்.

எதிர்மறையான அரசியலில் இருந்து மீண்டு, ஆக்கப்பூர்வமான அரசியல் பாதையில் நாங்கள் முன்னேறிக் கொண்டு இருக்கிறோம்.

இவ்வாறு பிரதமர் பேசினார்.



↑ நாடு முழுவதும் 508 ரயில் நிலையங்களை அதிநவீன வசதிகளுடன் புதுப்பிக்கும் திட்டத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி நேற்று காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார். படம்: பிடிஐ

**வணிக வீதி**
உள்ளே...



### திருவள்ளூர், திருத்தணி, கும்மிடிப்பூண்டி, செங்கை, கூடுவாஞ்சேரி

# ரயில் நிலையங்களில் மறுசீரமைப்பு பணிகள்

## ● காணொலி மூலம் அடிக்கல் நாட்டினார் பிரதமர் மோடி

● **திருவள்ளூர்**

அம்ரித் பாரத் நிலைய திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் 3 ரயில் நிலையங்கள், செங்கல்பட்டில் செங்கை மற்றும் கூடுவாஞ்சேரி ஆகிய ரயில் நிலையங்கள் என 5 நிலையங்களில் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற உள்ளன. இதற்காக பிரதமர் நரேந்திரமோடி காணொலிக் காட்சி மூலம் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

**508 ரயில் நிலையங்கள்**

'அம்ரித் பாரத் ரயில் நிலைய' திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 508 ரயில் நிலையங்கள் இதன் உலகத்தரத்தில் மேம்படுத்தப்பட உள்ளன. இதில், திருவள்ளூர் மாவட்டத்தில் திருவள்ளூர், திருத்தணி, கும்மிடிப்பூண்டி ஆகிய 3 ரயில் நிலையங்கள் ரூ.60.04 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்பட உள்ளன. இந்த மறுசீரமைப்பு பணியில், புதிய நுழைவு வாயில்கள், மின் தூக்கி, கூடுதல் நடைமேம்பாலங்கள், நகரும் படிக்கட்டுகள், வாகன நிறுத்தம் உள்ளிட்டவை அமைக்கும் பணி நடைபெற உள்ளது. இப்பணிக்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று காணொலிக் காட்சி மூலம் நடைபெற்றது.

இந்த விழா திருவள்ளூர், திருத்தணி, கும்மிடிப்பூண்டி ஆகிய ரயில் நிலையங்களில் பள்ளி மாணவ-மாணவிகளின் கலை நிகழ்ச்சியுடன் தொடங்கியது. காணொலி மூலம் பிரதமர் நரேந்திர மோடி மறுசீரமைப்புக்கு அடிக்கல் நாட்டி திருவள்ளூர், திருத்தணி, கும்மிடிப்பூண்டி ஆகிய ரயில் நிலையங்களில் பணிகளை தொடங்கி வைத்தார்.



திருவள்ளூர் ரயில் நிலையத்தில் நடைபெற்ற அம்ரித் திட்ட விழாவில், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ், தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்ட முதன்மை வணிக மேலாளர் சுப்ரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வுகளில், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ், தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்ட முதன்மை வணிக மேலாளர் சுப்ரமணியன், முதுநிலை கோட்ட நிதி மேலாளர் ஆனந்த் பாட்டியா, கோட்ட வணிக மேலாளர் ஜெயந்தி உள்ளிட்ட ரயில்வே உயரதிகாரிகள் மற்றும் பாஜக மாநில துணை தலைவர் சக்ரவர்த்தி உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**செங்கல்பட்டு ரயில் நிலையம்**

இதேபோல் செங்கல்பட்டு ரயில் நிலையமும் ரூ.22.14 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்படவுள்ளது. இப்பணியையும் பிரதமர் காணொலிக் காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார்.

ரயில் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திமுக காஞ்சி எம்.பி. செல்வம் தலைமை தாங்கி கல்வெட்டை திறந்து வைத்தார். பின்னர் இதையொட்டி நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.

**கூடுவாஞ்சேரி ரயில் நிலையம்**

இந்த நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ஆ.ர.ராகுல்நாத், எம்எல்ஏ வரலட்சுமி, செங்கல்பட்டு நகர மன்ற தலைவர் தேன்மொழி உட்பட அரசு அலுவலர்கள் அரசியல் கட்சி பிரமுகர்கள் பங்கேற்றனர். இதேபோல் கூடுவாஞ்சேரி ரயில் நிலையமும் மறுசீரமைப்புக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**விழாவில் இரு வேறு சலசலப்புகள்**

திருவள்ளூர் ரயில் நிலையத்தில் நடைபெற்ற அம்ரித் திட்ட விழாவில், காணொலிக் காட்சி மூலம் பிரதமர் பங்கேற்பதற்கு முன்பு, காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திருவள்ளூர் எம்.பி. ஜெயக்குமார் பேசும்போது, மணிப்பூர் கலவரம் பற்றி குறிப்பிட்டார். இதனால் கோபமடைந்த பாஜகவினர், ஜெயக்குமாரின் உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து முழக்கமிட்டனர். இதையடுத்து, எம்.பி. மற்றும் பொன்னேரி எம்எல்ஏ துரை. சந்திரசேகர் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியினர், விழா நடந்த பகுதியிலிருந்து வெளியேறினர். இதனால், திருவள்ளூர் ரயில் நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

செங்கல்பட்டில் நடந்த நிகழ்ச்சியில் எம்.பி. எம்எல்ஏ, உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கென மேடையின் முன் வரிசையில் இருக்கை ஒதுக்கப்பட்டு கல்வெட்டிலும் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. ஆனால், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ஆ.ர.ராகுல்நாத்துக்கு முன் வரிசையில் இருக்கையும் ஒதுக்கப்படவில்லை கல்வெட்டிலும் பெயர் இடம்பெறவில்லை. இந்த சம்பவம் அங்கிருந்த மக்கள் மத்தியிலும் சமூக ஆர்வலர்களிடமும் சலசலப்பை ஏற்படுத்தியது.




அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று நடைபெற்ற சென்னை பல்கலைக்கழகத்தின் 165-வது பட்டமளிப்பு விழாவில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பங்கேற்று, மேலாண்மைக் கல்வியில் 'கிரேட் பிரிட்டன், அமெரிக்கா, இந்தியா இடையே உயர்கல்வியில் ஓர் ஒப்பீடு' என்ற தலைப்பில் முனைவர் பட்டப் படிப்பை முடித்த விஐடி பல்கலைக்கழக துணை தலைவர் ஜி.வி.செல்வத்துக்கு பட்டம் வழங்கினார். உடன் ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் ஸ்டாலின், உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி ஆகியோர்.

### 6 குடியரசுத் தலைவர்கள், அறிஞர்கள், நோபல் விருதாளர்களை உருவாக்கி

# கற்றலின் புகலிடமான சென்னை பல்கலை.

### 165-வது பட்டமளிப்பு விழாவில் குடியரசுத் தலைவர் முர்மு புகழாரம்

**சென்னை**

நாட்டின் 6 குடியரசுத் தலைவர்கள், நோபல் விருதாளர்கள் என்று எண்ணற்ற மேதைகளை உருவாக்கியதன் மூலம் கற்றலின் புகலிடமாக சென்னை பல்கலைக்கழகம் திகழ்கிறது என்று சென்னையில் நடைபெற்ற 165-வது பட்டமளிப்பு விழாவில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு புகழாரம் சூட்டியுள்ளார்.

சென்னை பல்கலைக்கழகத்தின் 165-வது பட்டமளிப்பு விழா, சென்னை அண்ணா பல்கலைக்கழக அரங்கில் நேற்று நடைபெற்றது. இதில், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பங்கேற்றார். மேலாண்மை கல்வி படிப்பில் 'கிரேட் பிரிட்டன், அமெரிக்கா, இந்தியா இடையே உயர்கல்வியில் ஓர் ஒப்பீடு' என்ற தலைப்பில் முனைவர் பட்டப் படிப்பை முடித்த விஐடி பல்கலைக்கழக துணை தலைவர் ஜி.வி. செல்வம், பொருளாதார துறையில் 'மத்திய அரசின் நிதி பகிர்வால் மாநிலங்களின் வளர்ச்சி, பொது செலவினம், வருவாயில் ஏற்படும் மாற்றங்கள்' என்ற தலைப்பில் முனைவர் பட்டப் படிப்பை முடித்த முன்னாள் தலைமைச் செயலர் கே.சண்முகம் மற்றும் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை குடியரசுத் தலைவர் முர்மு வழங்கினார்.

விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் ஸ்டாலின், உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி, சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் ச.கவுரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

விழாவில் அவர்கள் பேசியதாவது:

**குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு:** நாகரிகம், கலாச்சாரத்தின் தொட்டிலாக தமிழகம் திகழ்கிறது. சங்க இலக்கியத்தின் செழுமையான மரபுகள் இந்தியாவின் விலைமதிப்பற்ற பாரம்பரியம் ஆகும். திருக்குறளில் பொதிந்துள்ள மகத்தான கருத்துகள் பல நூற்றாண்டுகளாக நம்மை வழிநடத்தி வருகின்றன.

சென்னை பல்கலைக்கழகம் மற்றும் அதன் இணைப்பு கல்லூரிகளில் சுமார் 1.85 லட்சம் பேர் பயில்கின்றனர். இதில் 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் மாணவிகள். இன்று தங்கப் பதக்கம் பெற்ற 105 பேரில் 70 சதவீதம் பேர் மாணவிகள்.

1857-ல் தொடங்கப்பட்ட சென்னை பல்கலைக்கழகத்தின் 165 ஆண்டு பயணத்தில் எண்ணற்ற அறிஞர்கள், தலைவர்கள், தொலைநோக்கு பார்வையாளர்களை உருவாக்கி, கற்றலின் புகலிடமாக திகழ்கிறது. எனது முன்னோடிகளான டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன், வி.வி.கிரி, நீலம் சஞ்சீவ ரெட்டி, ஆர்.வெங்கட்ராமன், கே.ஆர்.நாராயணன், அப்துல் கலாம் என 6 முன்னாள் குடியரசுத் தலைவர்கள், நாட்டின் முதல் கவர்னர் ஜெனரல் ராஜகோபாலாச்சாரி, நோபல் பரிசு பெற்று அறிவியல் உலகுக்கு சிறப்பான பங்களிப்பை வழங்கிய சர்.சி.வி.ராமன், எஸ்.சந்திரசேகர் ஆகியோர் இந்த பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள்.

அதிநவீன ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும், துறைகளுக்கு இடையேயான ஆய்வுகள், சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிக்கவும் இப்பல்கலைக்கழகம் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

**ஆளுநர் ஆர்.என்.ரவி:** உங்கள் கனவுகள் பெரிதாக இருக்க வேண்டும். வாழ்க்கையில் பெரிய இலக்குகளை நிர்ணயிக்க வேண்டும். அதை அடைய நம்பிக்கையுடன் கடுமையாக உழைக்க வேண்டும். அப்போது நீங்கள் மட்டுமின்றி, உங்கள் குடும்பம், மாநிலம், நாடும் வளரும். 2047-ல் இந்தியாவும் வல்லரசாகும்.

**முதல்வர் ஸ்டாலின்:** நீதிபதிகள், அரசியல் தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள், முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி ரெட்டி உள்ளிட்ட தலைசிறந்த பெண் ஆளுமைகளை வழங்கிய பெருமை இந்த பல்கலைக்கழகத்துக்கு உண்டு. பேரறிஞர் அண்ணாவும் இங்குதான் படித்தார். நானும் இதே பல்கலைக்கழகத்தை சார்ந்தவன்தான். நாட்டிலேயே உயர்கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலமாக தமிழகம் உள்ளது. இவ்வாறு அவர்கள் பேசினர்.

இந்த பட்டமளிப்பு விழா மூலம் மொத்தம் 1 லட்சத்து 4,416 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

**பாரதியார் அரங்கமான தர்பார் ஹால்**

ஆளுநர் மாளிகையில் உள்ள தர்பால் ஹாலுக்கு 'பாரதியார் அரங்கம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. நேற்று மாலை நடந்த விழாவில், பெயர் பலகை, பாரதியார் படத்தை குடியரசுத் தலைவர் முர்மு திறந்து வைத்தார். முன்னதாக, அவரை ஆளுநர் ரவி, அவரது மனைவி லட்சுமி ரவி, முதல்வர் ஸ்டாலின் ஆகியோர் வரவேற்றனர். துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர்கள், எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி, முன்னாள் அமைச்சர்கள், இளையராஜா, பாரதியாரின் பேரன் அர்ஜுன் பாரதி, பேராசிரியர் ஞானசம்பந்தன், பத்மஸ்ரீ விருதாளர்கள் வடிவேல் கோபால், மாசி சடையன் பங்கேற்றனர்.



சென்னையில் நடைபெற்ற 'கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான்' ஓட்டத்தில் பங்கேற்றோர்.
படங்கள்: எஸ்.சத்தியசீலன்



'கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான்' ஓட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிசு வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், உதயநிதி ஸ்டாலின், 'இந்து' என்.ராம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### சென்னையில் பிரம்மாண்ட மாரத்தான் ஓட்டம்

# 73 ஆயிரம் பேர் பங்கேற்று 'கின்னஸ்' சாதனை

## வெற்றி பெற்றவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிசு வழங்கினார்

**சென்னை**

முன்னாள் முதல்வர் கருணாநிதி நூற்றாண்டையொட்டி, திமுக சார்பில் 'கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான்-2023' சென்னையில் நேற்று நடைபெற்றது. இதில், முதல்முறையாக ஒரே இடத்தில் 50,629 ஆண்கள், 21,514 பெண்கள் என 73,206 பேர் பங்கேற்று கின்னஸ் சாதனை படைத்தனர்.

இந்தப் போட்டி 42, 21, 10 மற்றும் 5 கி.மீ. ஆகிய 4 பிரிவுகளில் நடைபெற்றது. 1,063 திருநங்கை, திருநம்பிகள், 500-க்கும் மேற்பட்ட ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள், 1,500 கடலோர காவல் படை, ராணுவ வீரர்கள் பங்கேற்றனர்.

முன்னதாக, முன்னாள் முதல்வர் கருணாநிதி நினைவிடத்தில் 42 கி.மீ. தொலைவு மாரத்தான் ஓட்டத்தை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கிவைத்தார். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 21, 10, 5 கி.மீ. தொலைவு மாரத்தான் ஓட்டங்களை தொடங்கி வைத்தார். சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார்.

பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரை வழியாக நடைபெற்ற மாரத்தான் ஓட்டம், மீண்டும் கருணாநிதி நினைவிடத்தில் முடிவடைந்தது. இதையொட்டி, நேற்று அதிகாலை இலவச மெட்ரோ ரயில் சேவை இயக்கப்பட்டது. மேலும், வழிநெங்கும் இசைக் கலைஞர்கள் திரண்டு, போட்டியாளர்களை ஊக்குவித்தனர்.

பின்னர், தீவுத்திடலில் நடைபெற்ற நிறைவு விழாவில், 'கின்னஸ்' உலக சாதனைக்கான சான்றிதழை, அக் குழுவினர் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கினர். தொடர்ந்து, போட்டியில் வென்றவர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் பரிசு வழங்கினார். மேலும், போட்டியில் பங்கேற்ற திருநங்கை, திருநம்பிகளுக்கு திமுக இளைஞரணி சார்பில் தலா ரூ.1,000 ஊக்கத் தொகையை, அமைச்சர் உதயநிதி வழங்கினார்.

மாரத்தான் போட்டி பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்ட ரூ.3.43 கோடியை, ராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையின் புற்றுநோய் சிகிச்சை மையத்துக்கு முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

இந்நிகழ்வில் முதல்வர் ஸ்டாலின் பேசும்போது, "சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மாரத்தான் போட்டியை கடந்த 3 ஆண்டுகளாக சிறப்பாக நடத்தி வருகிறார். 2020-ல் பதிவுக் கட்டணமாக கிடைத்த ரூ.23 லட்சத்தை பேரிடர் நிவாரண நிதிக்கும், 2021-ல் கிடைத்த ரூ.56 லட்சத்தை கரோனா நிவாரண நிதிக்கும் வழங்கினார்.

கடந்த ஆண்டு மாரத்தானில் 43,231 பேர் பங்கேற்றது, ஆசிய சாதனையாக அமைந்தது. அப்போது கிடைத்த ரூ.1.22 கோடி எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது.

தற்போது நடைபெற்ற போட்டியில் 73,206 பேர் கலந்துகொண்டு 'கின்னஸ்' சாதனை படைத்துள்ளனர். இது சாதாரண மாரத்தான் அல்ல, சமூகநீதிக்கான மாரத்தான். மாரத்தான் ஓட்டம் உடல் உறுதிக்கு மட்டுமல்ல, உள்ள உறுதிக்கும் அடித்தளம் அமைக்கும். மக்களை சுறுசுறுப்பாக வைத்திருக்க, இது போன்ற போட்டிகள் அதிகம் நடத்த வேண்டும். உதயநிதி விளையாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, அந்த துறை பல மடங்கு எழுச்சி பெற்றிருக்கிறது என்றார்.

நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பொன்முடி, சேகர் பாபு, மனோ தங்கராஜ், எம்.பி.க்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, சுகாதாரத் துறைச் செயலர் ககன்தீப் சிங் பேடி, மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ்குமார், ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், 'இந்து' என்.ராம், அப்போலோ மருத்துவமனை துணைத் தலைவர் பிரீத்தா ரெட்டி, காவேரி மருத்துவமனை தலைவர் சந்திரகுமார், ஐஓபி மேலாண் இயக்குநர் அஜய்குமார், புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஓகேஎஸ்.சதீஷ், பல்வேறு வெளிநாட்டு தூதர்கள் பங்கேற்றனர்.

# ஜப்பானை தமிழ்நாடு எப்படி பயன்படுத்திக் கொள்ளலாம்?





**கருணாநிதி காசிநாதன்**
kk@kecs.co.in

உலகின் உற்பத்தி மையமாக சீனா தற்போது திகழ்ந்து வருகிறது. உலகின் மொத்த ஏற்றுமதியில் சீனாவின் பங்கு மட்டும் 15 சதவீதம் ஆகும். மின்னணு சாதனங்கள், இயந்திரங்கள், பிளாஸ்டிக் தயாரிப்புகள் தொடங்கி உற்பத்திக்குத் தேவையான கச்சா பொருள்கள் வரையில் உலக நாடுகளுக்கு பிரதானமாக சீனாவிலிருந்து விநியோகமாகிறது.

கரோனா மற்றும் ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாக உலகளாவிய விநியோகச் சங்கிலியில் நெருக்கடி ஏற்பட்டது. இதன் காரணமாக, சீனாவிலிருந்து சரக்குகள் சரியான நேரத்தில் கிடைக்கப் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டது. இந்தச் சூழலில் தங்கள் விநியோகத்துக்கு சீனாவை நம்பி இருக்க வேண்டாம் என்ற நிலைப்பாட்டுக்கு உலக நாடுகள் வந்துள்ளன. இதற்கு சீனாவின் அரசியல் போக்கும் ஒரு காரணம். இதன் தொடர்ச்சியாக, வெளிநாட்டு நிறுவனங்கள் சீனாவிலிருந்து வெளியேறி வேறு ஆசிய நாடுகளில் தங்கள் நிறுவனத்தை அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன.

டொயோட்டா, ஹோண்டா, சோனி, கேனான் உள்ளிட்ட முக்கிய ஜப்பான் நிறுவனங்கள் சீனாவில் ஆலையைக் கொண்டுள்ளன. அங்கு தயாரிப்பு மேற்கொள்ளப்பட்டு அது ஜப்பானுக்கு ஏற்றுமதியாகும். ஆனால், தற்போது ஜப்பான் நிறுவனங்களும் சீனாவிலிருந்து வெளியேற தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன.

**தமிழ்நாட்டுக்கான வாய்ப்பு**

பொருளாதார ரீதியாக உலகின் 5-வது பெரிய நாடாக இந்தியா முன்னேறியுள்ளது. தற்போது சர்வதேச அளவில் பொருளாதார மந்தநிலை காணப்பட்ட போதிலும், இந்தியாவின் பொருளாதாரம் மேம்பட்ட நிலையில் இருக்கிறது. இதனால், உலக நாடுகள் சீனாவுக்கு மாற்றாக இந்தியாவில் தங்கள் நிறுவனங்களை அமைக்க பரிசீலித்து வருகின்றன.

ஜப்பானும் தற்போது சீனாவுக்கு மாற்றாக இந்தியாவை பரிசீலிக்கத் தொடங்கி இருக்கிறது. இந்தியாவுடன் தொழில் உறவை வலுப்படுத்த ஜப்பான் திட்டங்களை வகுத்து வருகிறது.

ஜப்பான் மூலம் உருவாகி வரும் வாய்ப்புகளை தமிழ்நாடு பயன்படுத்திக் கொள்ள நிறைய வழிகள் உள்ளன. இந்தியாவின் வளர்ச்சியில் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்நிலையில், இந்திய சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கு முதலீடு வழங்க ஜப்பான் ஆர்வமாக உள்ளது. இந்திய நிறுவனங்களுடன் கூட்டிணைந்து செயல்பட ஜப்பான் முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

இந்திய அளவில் தொழில் துறையில் மேம்பட்ட மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள சிறு, குறு நிறுவனங்கள் ஜப்பானிடமிருந்து ஆர்டர் பெற்று அந்த வேலைகளை இங்கிருந்து செய்து கொடுக்கலாம். அதேபோல், ஜப்பான் நிறுவனத்துடன் கூட்டு வைத்து அவர்களிடம் முதலீடு பெற்று அவர்களது ஆர்டர்களை இந்தியாவில் செய்து உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்.

**ஜப்பானின் கடன் உதவி**

ஜப்பான் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மிக மிகக் குறைந்த வட்டியில் கடன் வழங்குகிறது. ஆண்டுக்கு 0.1% முதல் 0.5% அளவிலேயே ஜப்பானிய கடன்களுக்கான வட்டி விகிதம் உள்ளது. இந்த வாய்ப்பை தமிழ்நாட்டு நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று இந்தியாவின் மெட்ரோ ரயில் திட்டங்கள் அனைத்தும் ஜப்பான் நாட்டின் கடன் உதவி மூலமே மேற்கொள்ளப்படுகிறது. ஜப்பானில் JICA (Japan international cooperation agency) என்ற முதலீட்டு நிறுவனம் வெளிநாட்டு அரசுகளுக்கு கடன் வழங்கக் கூடியது. வெளிநாட்டைச் சேர்ந்த தனியார் நிறுவனங்களுக்கு கடன் வழங்க JBIC நிறுவனம் உள்ளது.

இன்று இந்தியாவில் மேற்கொள்ளப்படும் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு JICA நிறுவனம்தான் கடன் உதவி வழங்குகிறது. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியின் விரிவாக்கம் JICA நிறுவனத்தின் நிதி மூலமே மேற்கொள்ளப்படுகிறது. சுகாதாரம், கல்வி, விவசாயம், உள்கட்டமைப்பு உள்ளிட்டவற்றுக்கு அவை கடன் வழங்குகின்றன.

எனவே, ஜப்பானின் கடன் உதவி குறித்து தமிழ்நாட்டில் உள்ள சிறு, குறு நிறுவனங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். எல்லா திறனும் இருந்தும் போதிய முதலீடு இல்லாமல் திணறுபவர்களுக்கு ஜப்பானின் முதலீடு கைக்கொடுக்கக்கூடியதாக அமையும்.

**இந்திய இளைஞர்களை குறிவைக்கும் ஜப்பான்**

தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளில் ஜப்பான் உலகின் முக்கிய நாடுகளில் ஒன்றாக உள்ளது. ஒரு சிறிய உதாரணம். இந்தியாவில் பால் உற்பத்தியில் 10 சதவீதம் கேனிலேயே வீணாகிறது. ஆனால், ஜப்பானில் பால் கேன்களில் சோலார் பட்டைகள் சுற்றப்படுகின்றன. இதன் மூலம், அந்த கேன்களில் பல நாள் இருந்தாலும் பால் கெடுவதில்லை. குப்பை மேலாண்மை, மறுசுழற்சி உள்ளிட்டவற்றில் ஜப்பான் முன்னுதாரண நாடாக உள்ளது.

இப்படி தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளில் இந்தியாவை விட பலபடி முன்னிலையில் இருக்கும் ஜப்பானுக்கு ஒரு சிக்கல் இருக்கிறது. அங்கு வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இளைஞர்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இதனால், அங்கு வேலை வாய்ப்பில் ஈடுபடும் மக்களின் பங்கு குறைகிறது. இந்தச் சூழலில், தங்கள் நாட்டு வளர்ச்சிக்கு, திறன்மிக்க இந்திய இளைஞர்களை பயன்படுத்த ஜப்பான் திட்டமிட்டு வருகிறது. இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஜப்பான் அரசு சகுரா சயின்ஸ் என்ற திட்டத்தை முன்னெடுத்துள்ளது. இதன்படி, அறிவியலில் ஆர்வமுள்ள வெளிநாட்டு மாணவர்களை தங்கள் நாட்டுக்கு அழைத்து வந்து அவர்களுக்கு புதிய விஷயங்களை கற்றுத் தருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இந்தியாவில் வட மாநிலங்களில் உள்ள பள்ளிகளிலிருந்து மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் ஜப்பான் செல்கின்றனர். ஆனால், தமிழ்நாட்டிலிருந்து பெரிய அளவில் மாணவர்கள் ஜப்பானுக்கு அழைத்துச் செல்லப்படுவதில்லை. அதற்கான முயற்சிகளை நாம் தொடங்க வேண்டும்.

**ஜப்பானில் வேலைவாய்ப்பு**

அதேபோல், ஜப்பானில் வேலைவாய்ப்புகள் கொட்டிக்கிடக்கின்றன. பொறியியல் துறை தொடங்கி, கட்டுமானம், விவசாயம், முதியோர்களை கவனிக்கும் பணி என பல தளங்களில் அங்கு வேலை வாய்ப்புகள் உள்ளன. சிக்கல் என்னவென்றால், ஜப்பான் நாட்டுக்குச் சென்று வேலை செய்ய ஜப்பான் மொழி தெரிந்திருப்பது அவசியம். ஆனால், அது ஒன்றும் கடினமான விஷயமல்ல. 10 மாதங்களுக்குள் ஜப்பான் மொழியில் நன்கு தேர்ச்சி பெற முடியும். ஜப்பான் மொழியை கற்றுக்கொண்டால், 12-ம் வகுப்பு, ஐடிஐ, டிப்ளமோ முடித்தவர்கள் மாதம் ரூ.1.5 லட்சம் வரையிலும் பொறியியல் படிப்பு முடித்தவர்கள் மாதம் ரூ.2.5 லட்சம் முதல் ரூ.8 லட்சம் வரையிலும் ஜப்பானில் ஊதியம் பெற முடியும்.

யோகா, ஆயுர்வேதா, சித்தா ஆகியவை சார்ந்தும் ஜப்பான் ஆர்வம் காட்டி வருகிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்த நாம் உரிய திட்டங்களை வகுக்க வேண்டும்.

கட்டுரையாளர்:
***நிறுவனர் மற்றும் தலைவர், கே-கேசிஎஸ் இந்தியா***
**இந்தியா - ஜப்பான் இடையே வேலை மற்றும் தொழில் வாய்ப்புகளை ஒருங்கிணைக்கும் நிறுவனம்.**

### தமிழக அரசின் சிறுதானிய இயக்கம்

# 20 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்

## ● உணவுத் துறை அமைச்சர் சக்கரபாணி தகவல்

● **சென்னை**

தமிழக அரசின் சிறுதானிய இயக்கம் 20 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும் என்று உணவுத் துறை அமைச்சர் ஆர்.சக்கரபாணி கூறினார்.

எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பில், 'உணவு, ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்துக்கான வலிமைமிக்க சிறு தானியங்கள்' என்ற தலைப்பிலான சர்வதேச மாநாடு தொடக்க விழா, சென்னை தரமணியில் உள்ள அறக்கட்டளை வளாகத்தில் நேற்று நடைபெற்றது.



↑ சென்னையில் நேற்று தொடங்கிய சர்வதேச அளவிலான சிறுதானியங்கள் மாநாட்டில், எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் ஆண்டறிக்கையை வெளியிட்டார் உணவுத் துறை அமைச்சர் ஆர்.சக்கரபாணி. உடன், அறக்கட்டளைத் தலைவர் சவுமியா சுவாமிநாதன், பேராசிரியர் ரூத் டிஃப்ரைஸ், ஐக்கிய நாடுகள் சபை உலக உணவுத் திட்ட இயக்குநர் எலிசபெத் ஃபாரே உள்ளிட்டோர்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டின் தொடக்க விழாவில் பங்கேற்ற, தமிழக உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் ஆர்.சக்கரபாணி, அறக்கட்டளையின் ஆண்டறிக்கையை வெளியிட்டார்.

தொடர்ந்து, சிறுதானியக் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பார்வையிட்டார். பின்னர் அவர் பேசியதாவது:

தமிழ்நாடு சிறு தானிய இயக்கத்தின் கீழ், சிறு தானியங்கள் பயிரிட தமிழக அரசு 50 ஆயிரம் ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், ஐந்தாண்டு சிறு தானிய இயக்கத் திட்டத்தை, தமிழக அரசு 20 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த உள்ளது. பொது விநியோகத் திட்டம் மூலம் மானிய விலையில் சிறு தானியங்கள் விநியோகிக்கப்படும்.

மேலும், தரிசு நிலத்தைச் சிறு தானியச் சாகுபடியின் கீழ் கொண்டு வர ஊக்கத்தொகை வழங்கப்படும். இந்த நடவடிக்கை 'விவசாய நிலங்களில் பயிர் பன்முகத்தன்மை'யை உறுதி செய்யும்.

கால்சியம், பாஸ்பரஸ், நார்ச்சத்து மற்றும் புரதம் ஆகிய அனைத்தும் நம் ஆரோக்கியத்துக்கு அவசியம். தினசரி உணவில் அனைத்து வகையான சிறு தானியங்களைச் சேர்ப்பதன் மூலம் இத்தகைய ஊட்டச்சத்துகளைப் பெற முடியும். இவ்வாறு அமைச்சர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில், அறக்கட்டளைத் தலைவர் சவுமியா சுவாமிநாதன், நியூயார்க் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் மற்றும் நிலையான வளர்ச்சித் துறை பேராசிரியர் ரூத் டிஃப்ரைஸ், ஐக்கிய நாடுகள் சபை உலக உணவு திட்டத்தின் இந்திய இயக்குநர் எலிசபெத் ஃபாரே உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

EVA STALIN

# புவி தாழ்வட்ட சுற்றுப்பாதையில் 'பிஎஸ்-4' இயந்திரம்

## விண்வெளி ஆய்வு மையம் தகவல்

**சென்னை**

பிஎஸ்எல்வி சி-56 ராக்கெட்டின் பிஎஸ்-4 இயந்திரம் புவி தாழ்வட்ட சுற்றுப்பாதைக்கு உந்தி தள்ளப்பட்டதாக இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) தெரிவித்துள்ளது.

சிங்கப்பூருக்குச் சொந்தமான 'டிஎஸ்-சார்' உள்ளிட்ட 7 செயற்கைக்கோள்களை பிஎஸ்எல்வி சி-56 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து கடந்த ஜூலை மாதம் 30-ம் தேதி இஸ்ரோ விண்ணில் செலுத்தியது.

அனைத்து செயற்கைக்கோள்களும் திட்டமிட்ட சுற்றுப்பாதைகளில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டன. அதன் பின்னர் ராக்கெட்டின் இறுதி நிலையான பிஎஸ்-4 இயந்திரத்தை புவி தாழ்வட்ட சுற்றுப்பாதைக்கு கொண்டு வரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அந்த வகையில் பிஎஸ்-4 இயந்திரம் 300 கிலோமீட்டர் தொலைவு கொண்ட தாழ்வட்டப் பாதைக்கு தற்போது கொண்டு வரப்பட்டுள்ளது.

இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியதாவது: புவியில் இருந்து 530 கிலோமீட்டர் தொலைவு கொண்ட சுற்றுப்பாதைகளில்தான் பெரும்பாலான செயற்கைக் கோள்கள் நிலைநிறுத்தப்படுகின்றன. இதனால் ஏற்படும் விண்வெளிக் கழிவுகளை தவிர்க்கும் வகையில், தாழ்வட்டப் பாதையில் செயற்கைக்கோள்களை நிலைநிறுத்துவதற்கான ஆய்வில் உலக நாடுகள் ஆர்வம் காட்டுகின்றன.

இதன்மூலம் பிஎஸ்-4 இயந்திரத்தை புவியின் வளிமண்டலப் பகுதிக்குள்ளளிதில் கொண்டுவந்து எரிக்க முடியும். அப்போதுதான் ராக்கெட்டின் எஞ்சிய பாகங்கள் விண்வெளிக் கழிவுகளாக மாறாமல் இருக்கும்.

அதற்கான சோதனை முயற்சியாக தற்போது பிஎஸ்-4 இயந்திரம் இருமுறை இயக்கப்பட்டு, 300 கிலோமீட்டர் தொலைவு கொண்ட புவியின் தாழ்வட்ட சுற்றுப்பாதைக்கு உந்தி தள்ளப்பட்டது. மேலும், அதில் உள்ள எரிபொருட்களும் வெளியேற்றப்பட உள்ளன.

இதன் காரணமாக பிற ஆய்வுக் கருவிகளுடன் மோதும்போது ஏற்படும் சேதம் குறைக்கப்படும். மேலும், விண்வெளிக் கழிவுகள் உருவாவதும் தடுக்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.




# அணு ஆயுதங்களுக்குத் தேவை முடிவுரை!

**உலகில் தற்போது 14,930 அணு ஆயுதங்கள் குவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 90% அணு ஆயுதங்கள் அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளிடம் உள்ளன. ஏறத்தாழ 1,800 அணு ஆயுதங்கள் உடனடியாக ஏவப்படக்கூடிய வகையில் ஆயத்த நிலையில் உள்ளன.**



ஜி.ஆர்.இரவீந்திரநாத்
மருத்துவர், அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தின் பொதுச் செயலாளர்
தொடர்புக்கு: daseindia2021@gmail.com

இரண்டாம் உலகப் போரின் இறுதியில், 1945 ஆகஸ்ட் 6 அன்று ஜப்பானின் ஹிரோஷிமாவிலும் மூன்று நாள் கழித்து (ஆகஸ்ட் 9) அந்நாட்டின் இன்னொரு நகரமான நாகசாகியிலும் அணுகுண்டுகள் வீசப்பட்டன. அமெரிக்காவின் அணுகுண்டு வீச்சால் இந்த இரண்டு நகரங்கள் எதிர்கொண்ட பேரழிவுகளை ஒருபோதும் மறக்க முடியாது. இந்தக் கொடூரச் செயலால் ஏறத்தாழ 2.5 லட்சம் பேர் கொல்லப்பட்டனர். பல ஆண்டுகளுக்குப் பிறகும் பல்லாயிரம் பேர் பல்வேறு வகை பாதிப்புகளால் மரணமடைந்தனர்.

ஹிட்லரின் நாஜி படைகளை வெற்றிகொண்ட சோவியத் ஒன்றியத்தின் செம்படை, ஜப்பானை நோக்கி முன்னேறியது. 1945 ஆகஸ்ட் 8 அன்று ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்தது. இரண்டு அணுகுண்டுகள் வீசப்பட்ட பிறகும் போரைத் தொடர நினைத்த ஜப்பான், ஆகஸ்ட் 15 அன்று சரணடைவதற்கான அறிவிப்பை வெளியிட சோவியத் ஒன்றியத்தின் இந்த வியூகமே காரணமானது. உண்மையில், அணுகுண்டுகள் வீசப்படாவிட்டாலும்கூட ஜப்பான் 1945 ஆகஸ்ட் மாதம் சரணடைந்திருக்கும் என்பதை ஜப்பானிய, அமெரிக்க ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன. இதை அன்றைய அமெரிக்க அதிபர் ஹாரி எஸ்.ட்ரூமேனும் நன்கு அறிந்திருந்தார். ஆம், அவசியமே இல்லாத நிலையிலும் ஜப்பானிய நகரங்கள் மீது அணு ஆயுதங்களை அமெரிக்கா வீசியது. தனது அரசியல், பொருளாதார, ராணுவ மேலாதிக்கத்தை உலகில் நிலைநாட்ட வேண்டும்; சோவியத் ஒன்றியத்தை அச்சுறுத்த வேண்டும் என்ற அமெரிக்காவின் அரசியல் நோக்கமே இதற்குக் காரணமாகும்.

**மனிதகுலத்துக்கு எதிரானது:** உலகில் இதுவரை 2,087 அணுகுண்டுப் பரிசோதனைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. அமெரிக்கா 1,054, ரஷ்யா 715, பிரிட்டன் 45, பிரான்ஸ் 210, சீனா 45, இந்தியா, பாகிஸ்தான், வட கொரியா தலா 6 எனப் பரிசோதனை நடத்தியுள்ளன. இந்தப் பரிசோதனைகள் அனைத்தும் சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவித்திருக்கின்றன. ஏதேனும் விபத்தால், ஓர் அணுகுண்டு வெடித்தால்கூட, அது பல லட்சம் மக்களைக் கொன்றுக் குவித்துவிடும். அதிக அளவிலான அணுகுண்டு வெடிப்புகளால் ஏற்படும் புகை/ தூசு மண்டலம் தரையிலிருந்து மேலெழுந்து புவிப்பரப்பு முழுவதையும் பல மாதங்களுக்குப் போர்த்திவிடும். இதனால் சூரியக் கதிர்கள் புவி பரப்பில் நுழையாது. பூவுலகே இருண்டு, குளிர்ந்து, வறண்டுவிடும். இது அணு குளிர்காலம் எனப்படும். இதனால் புவிவாழ் உயிரினங்களும் மக்களும் மடியும் நிலை ஏற்படும்.

அணுகுண்டு வீசப்படும் இடத்தில் உள்ள அனைத்தும் எரிந்து ஆவியாகிவிடும். அவ்வெடிப்பிலிருந்து வெளிவரும் அயனியாக்கக் கதிர்வீச்சு உயிரினங்களின் செல்களையும் உறுப்புகளையும் அழித்துவிடும். அதிக அளவிலான இக்கதிர்வீச்சு, உடனடி மரணத்துக்கு வழிவகுக்கும். இக்கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புற்றுநோய் உள்பட பல்வேறு நோய்கள் ஏற்படும். அவர்களின் குரோமோசோம்களும் ஜீன்களும் பாதிக்கப்படும். எதிர்காலச் சந்ததிகளுக்குப் பல்வேறு மரபு சார்ந்த நோய்கள் உருவாகும்.

**அணு ஆயுதங்கள் சட்டவிரோதம்:** 'அணு ஆயுதங்கள் பேரழிவை உருவாக்குபவை. எனவே, அவற்றை முழுமையாக ஒழித்திட வேண்டும்' என்ற முகப்புரையுடன் அணு ஆயுதத் தடை ஒப்பந்தம், ஐக்கிய நாடுகளின் பொது அவையில் 2017 ஜூலை 7 அன்று நிறைவேறியது. இந்த உடன்பாட்டை 122 நாடுகள் ஆதரித்து வாக்களித்தன. இது சட்டரீதியான சர்வதேச உடன்படிக்கையாக மாறியுள்ளது. இந்த உடன்பாட்டின்படி, அனைத்து அணு ஆயுதங்களும் சட்டத்துக்குப் புறம்பானவை; அவற்றை ஒழித்திட வேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை அணு ஆயுத நாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

உலகில் தற்போது 14,930 அணு ஆயுதங்கள் குவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 90% அணு ஆயுதங்கள் அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளிடம் உள்ளன. ஏறத்தாழ 1,800 அணு ஆயுதங்கள் உடனடியாக ஏவப்படக்கூடிய வகையில் ஆயத்த நிலையில் உள்ளன. அமெரிக்காவின் அணு ஆயுதங்கள் ஐரோப்பாவில் 5 நாடுகளிலும் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. ஹிரோஷிமா–நாகசாகியில் பிரயோகிக்கப்பட்ட அணு ஆயுதங்களைவிட, இன்றைய அணு ஆயுதங்கள் பல மடங்கு அழிவாற்றல் மிக்கவை. இப்பேரழிவு அணு ஆயுதங்களிலிருந்து உலகைக் காக்க நம்பகமான ஒரே வழி, அவற்றை முற்றிலும் ஒழிப்பதுதான்.

**சமூகரீதியிலான பாதிப்புகள்:** அணு ஆயுதங்கள் பல்வேறு சமூகப் பொருளாதார தீய விளைவுகளையும் ஏற்படுத்திவருகின்றன. அணு ஆயுதங்களுக்காக, 82.4 பில்லியன் டாலர்களை 9 அணு ஆயுத நாடுகள் 2021ஆம் ஆண்டில் செலவு செய்துள்ளன. அதேவேளையில், உலகம் முழுவதும் கோடிக்கணக்கானோர் வறுமையாலும் வேலையின்மையாலும் மருத்துவ வசதிகள் இன்றியும் அவதிப்பட்டுவருகின்றனர். கல்வி-மருத்துவ வசதிகளுக்கான நிதியின் பெரும்பகுதி அணு ஆயுதங்களுக்காகவும் ராணுவத்துக்காகவும் செலவு செய்யப்படுகிறது. ஏறத்தாழ 3 கோடி அமெரிக்கர்களுக்கு மருத்துவக் காப்பீடு இல்லை. அமெரிக்காவில் மருத்துவக் காப்பீடு இல்லை எனில் எந்தச் சிகிச்சையும் பெற முடியாது. கோடிக்கணக்கில் டாலர்களை அணு ஆயுதங்களுக்கு வாரி இறைக்கும் அமெரிக்கா, தனது குடிமக்களுக்கு மருத்துவ சிகிச்சையைக்கூட இலவசமாக வழங்கவில்லை.

பல நாடுகளிலும் இதே நிலைதான். இந்தியாவில் அணு ஆயுதங்களுக்காக மத்திய அரசு கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்துவருகிறது. நாடாளுமன்றத்தில் இது தொடர்பாகக் கேள்வியும் கேட்க முடியாது. ஆனால், ஒவ்வோர் ஆண்டும் 6 கோடி இந்தியர்கள் மருத்துவச் செலவுகளால், வறுமைக் கோட்டுக்குக் கீழ் தள்ளப்படுகிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் 3.5 லட்சம் முதல் 4 லட்சம் பேர் வரை காசநோயால் இறந்துகொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் 321 குழந்தைகள் வயிற்றுப்போக்கின் காரணமாகவே இறக்கின்றன என்பது எவ்வளவு வேதனையானது.

அணு ஆயுதங்கள் உலகசமாதானத்தின், வளர்ச்சியின் எதிரிகள். மனிதகுலத்தின் கண்ணிய வாழ்வைக் கெடுப்பவை. அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் போரில் யாரும் வெல்ல முடியாது. தற்போது நடந்துவரும் ரஷ்ய-உக்ரைன் போர், நேட்டோ-ரஷ்யப் போராக மாறியுள்ளது. இது ஓர் அணு ஆயுதப் போராக மாறும் ஆபத்து ஏற்பட்டுள்ளது கவலை அளிக்கிறது. எனவே, அணு ஆயுதங்களை ஒழிப்போம். பூவுலகைக் காப்போம்.

**ஆகஸ்ட் 6: ஹிரோஷிமா நாள்;**
**ஆகஸ்ட் 9: நாகசாகி நாள்**

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# குனோவின் சிவிங்கிப்புலிகள்: தேவை தொலைநோக்குப் பார்வை!

மத்திய பிரதேசத்தில் உள்ள குனோ தேசியப் பூங்காவில், 2022 செப்டம்பர் மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட சிவிங்கிப்புலிகள் தொடர்ந்து இறந்துகொண்டிருப்பது கவலையளிக்கிறது. ஆகஸ்ட் 2 அன்று சிவிங்கிப்புலி ஒன்று இறந்ததை அடுத்து, இறந்துபோன சிவிங்கிப்புலிகளின் எண்ணிக்கை ஒன்பதாக உயர்ந்திருக்கிறது.

ஆப்பிரிக்கச் சிவிங்கிப்புலிகளை இந்தியாவில் அறிமுகப்படுத்தும் திட்டத்தை மத்திய அரசு 2009இல் முன்மொழிந்தது. அதைத் தொடர்ந்து ரூ.39 கோடி மதிப்பீட்டில், 'சிவிங்கிப்புலி செயல்திட்டம்' 2021இல் வெளியிடப்பட்டது. தேசியக் காட்டுயிர்ச் செயல்திட்டத்தின் (2017-2031) பல்வேறு கானுயிர்ப் பாதுகாப்பு அம்சங்களைச் சுட்டிக்காட்டி அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தை, தன் பிறந்த நாளான செப்டம்பர் 17 அன்று பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார்.

முதல் கட்டமாக நமீபியாவில் இருந்து 8 சிவிங்கிப்புலிகளும் (5 பெண், 3 ஆண்); இரண்டாம் கட்டமாக (பிப்ரவரி 18, 2023) தென் ஆப்பிரிக்காவில் இருந்து 12 சிவிங்கிப்புலிகளும் (7 ஆண், 5 பெண்) விமானத்தில் கொண்டுவரப்பட்டு, குனோ தேசியப் பூங்காவில் விடப்பட்டன. நவீனத் தொழில்நுட்பங்களைக் கொண்டு சிறப்பு குழுவினரின் மேற்பார்வையில் சிவிங்கிப்புலிகள் கண்காணிக்கப்பட்டுவந்த நிலையில், மார்ச் 27 அன்று சிவிங்கிப்புலி ஒன்று இறந்துபோனது. ஷாஷா என்று பெயரிடப்பட்டிருந்த அந்தச் சிவிங்கிப்புலி, சிறுநீரகக் கோளாறு காரணமாக உயிரிழந்ததாகக் கூறப்பட்டது.

மார்ச் 29 அன்று, ஜ்வாலா என்கிற சிவிங்கிப்புலி நான்கு குட்டிகளை ஈன்றது; அதில் மூன்று குட்டிகள் இறந்துபோயின. இவற்றைத் தொடர்ந்து, உதய் (ஏப்ரல் 24), தக்ஷா (மே 9), தேஜஸ் (ஜூலை 11), சூரஜ் (ஜூலை 14) என சிவிங்கிப்புலிகள் தொடர்ச்சியாக இறந்துபோயின. இந்தப் பின்னணியில், தற்போது மீண்டும் ஒரு சிவிங்கிப்புலி இறந்திருப்பது (ஆகஸ்ட் 2) அதிர்ச்சியையும் திட்டத்தின் நிலைத்தன்மை குறித்த அதிருப்தியையும் ஏற்படுத்தி இருக்கிறது.

வேட்டை மட்டுமின்றி, சுரங்கள், புல்வெளிக் காடுகள் என சிவிங்கிப்புலிகளின் வாழிடங்கள் அழிக்கப்பட்டதும் இந்தியத் துணைக்கண்டத்தில் அவை அற்றுப்போனதற்கு முக்கியக் காரணம் என்று ஆய்வுகள் கூறுகின்றன. கட்டுமானம், சாலை வசதி, போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக இந்தியாவில் புல்வெளிப் பகுதிகள், காடுகள் இன்றும் அழிக்கப்பட்டுவருகின்றன. புல்வெளிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் இந்திய ஓநாய், வெளிமான், சிங்காரா, கானமயில் போன்ற பல உயிரினங்கள் இந்தியாவிலேயே இருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்காமல், ஆப்பிரிக்கச் சிவிங்கிப்புலிகளை இந்தியாவில் அறிமுகப்படுத்தும் திட்டத்தின் தேவை என்ன என்பது குறித்த கேள்விகள் எழுந்தன. இத்திட்டம் மிகவும் பலவீனமான அறிவியல் அடித்தளத்தைக் கொண்டிருப்பதாக, காட்டுயிர்ப் பாதுகாப்புச் செயல்பாட்டாளர்கள் விமர்சித்துவந்தனர். தேசியக் கானுயிர்ப் பாதுகாப்பு முன்னுரிமைகளை விடுத்து, நடைமுறைச் சாத்தியமில்லாத – ஊதிப் பெருக்கப்பட்ட கானுயிர்ப் பாதுகாப்புக் கனவுகளை முன்மொழிவதாகவும், முன்னுரிமை தரப்பட வேண்டிய கானுயிர்ப் பாதுகாப்புப் பிரச்சினைகள், வளங்களைப் பாதுகாக்கும் கவனத்திலிருந்து விலகச்செய்வதாகவும் அவர்கள் முன்வைக்கும் விமர்சனங்கள் தர்க்கபூர்வமானவை.

சிவிங்கிப்புலிகள் தொடர் இறப்புகள் இத்திட்டத்துக்கு மிகப் பெரிய பின்னடைவைக் கொண்டுவந்திருக்கும் நிலையில், இது குறித்த மத்திய அரசின் நடவடிக்கை என்னவாக இருக்கும் என்பது பொதுச் சமூகத்தின் எதிர்பார்ப்பாக மாறி இருக்கிறது.